OS.No.51/2002
Dated : 19.09.2023

Time: 12.15 pm to 12.35 p.m

P.W- 2 சாட்சி பவித்ரா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1,3 பிரதிவாதிகள் சார்பாக குறுக்கு விசாரணை

<u>குறுக்கு விசாரணை:</u>

1) தாவா 2 வது சொத்தில் 1 பகுதியான சர்வே எண் 34/1 ல் உள்ள 4.15 நிலத்தில் பாதி 2.07-1/2 ஏக்கர் நிலத்தினை 1,2 பிரதிவாதிகள் கிரயத்திற்கு வாங்கினார்கள் என்றால் சரிதான். அதன் பத்திர பதிவு நகல் பி.வா.சா.ஆ. 6 ஆகும். தாவா 3 வது சொத்தில் வீட்டு மனைகளை 1,2 பிரதிவாதிகள் 29.08.1991 ல் கிரயம் பெற்றதற்கான பத்திர பதிவு நகல் பி.வாசா.ஆ.7 ஆகும். தாவா 4 வது இணைச்சொத்தினை 17.11.1997 ஆம் தேதியில் 3ம் பிரதிவாதி கிரயம் வாங்கியதற்கான பத்திர பதிவு நகல் பி.வா.சா.ஆ.8 ஆகும். தாவா 5 வது இணைச்சொத்தினை 3ம் பிரதிவாதி 14.03.2007 ஆம் தேதியில் கிரயம் பெற்ற பத்திர பதிவு நகல் வா.சா.ஆ.16 ஆகும். தாவா 6 வது இணைச்சொத்தினை 2ம் பிரதிவாதி 09.11.2010 ஆம் தேதியில் கிரயம் பெற்ற பத்திர பதிவு நகல் பி.வா.சா.ஆ.9 ஆகும். 6 வது இணைச்சொத்தின் ஒரு பகுதியினை 26.11.2011 ஆம் தேதி அன்று 2-ம் பிரதிவாதி 3 ம் பிரதிவாதிக்கு தானமாக கொடுத்த பத்திரத்தின் பத்திர பதிவு நகல் வா.சா.ஆ.17 ஆகும்.

2) தாவா 7 வது இணைச்சொத்தான வீட்டு மனையை 3-ம் பிரதிவாதி கிரயம் வாங்கியத்தற்கான கிரய பத்திர பதிவு நகல் வா.சா.ஆ.18 ஆகும். தாவா 8 வது இணைச்சொத்து 3-ம் பிரதிவாதி கிரயம் பெற்ற பத்திர பதிவு நகல் வா.சா.ஆ.19 ஆகும்.3-ம் பிரதிவாதி என் தகப்பனாரின் தாயார் ஆவார். அவர் அவருடைய தகப்பனார் மற்றும் சகோதரர்களுக்கு ஒரு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய பிரமாண பத்திரத்தில் 2 வது பத்தியில் சொல்லியுள்ள அணைத்து விவரங்களும் உண்மைக்கு புரம்பானவை என்றால் சரியல்ல.

3) அதே போல் தாவா சொத்துக்களில் 4/9 ல் பாதி பாகம் உள்ளது என்றும் அதில் கிடைக்கும் வருமானத்தையும் நான் அடைய அருகதிஉடையவர் என்று சொல்வதும் உண்மைக்கு புரம்பானது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் எனக்கு எவ்வித பாக உரிமையும் இல்லை என்றும் என் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

(மேற்படி குறுக்கு விசாரணை 2-ம் பிரதிவாதியும் ஏற்றுக்கொண்டார்)

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/- K.Ananthan,**
**Subordinate Judge,**
**Attur.**